| O.S.No. 74/2016 in joint Trial O.S.No. 43/2021 | DW1 : திருமதி.அம்பிகா க/பெ. திரு. நித்யாநந்தன் | 04-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

1. வாதிகள் 1 முதல் 5 வாதிகளை எனக்கு நன்றாக தெரியும். எனது கணவர் பெயர் நித்யாநந்தன். நான் அவருடன் கூட்டுக்குடும்பமாகத்தான் வாழ்ந்து வந்தேன். என் மாமனார் ஹோட்டல் கடை வைத்திருந்தார். வாதிகள் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கின்படி அவர்களுக்கு பாகப்பிரிவினை வழங்குவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. நீதிமன்றத்தின் மூலமாக அவரவர் பாகத்தினை அவரவர்களுக்கு சட்டப்படி பிரித்து ஒதுக்கீடு செய்து கொடுப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

2. 28-06-1976ல் என் மாமனார் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் இன்றைய தேதி வரை பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் என் மாமனார் பெயரிலேயே இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் உண்மைதான். என் மாமனார் சுயமாக இடம் வாங்கி அந்த இடத்தில் வீடு கட்டினார்.

**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :

(2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**